AdSW-B

அடையாள இலக்கம்

| H | | | | |
|---|---|---|---|---|

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2025

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# அடிப்படை எழுத்தறிவுப் போட்டி

## அதிமேற் பிரிவு

## AdSW-B

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**(அ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து கோடிட்ட இடத்தில் எழுதுக.**

1. செல்வன் தான் செய்த ________________ எண்ணிப் பெருமையடைந்தான்.

   அ) செயலோடு　　ஆ) செயலின்

   இ) செயலை　　ஈ) செயலால்

2. கர்ணன் ________________ நாடி வருபவர்களுக்கு வேண்டிய பொருள்களை அளித்தான்.

   அ) தனக்கு　　ஆ) தன்னை

   இ) தன்னை　　ஈ) தன்னால்

3. பாலன் நாள்தோறும் ______________________ பாடசாலைக்கு நடந்தே செல்வான்.

   அ) வீட்டுக்கு　　ஆ) வீட்டில்

   இ) வீட்டோடு　　ஈ) வீட்டிலிருந்து

4. கற்றல் பயணத்துக்குச் செல்லும் மாணவர்கள் ______________________ பள்ளிப்பேருந்தில் ஏறினார்கள்.

   அ) உற்சாகத்தால்　　ஆ) உற்சாகத்திலிருந்து

   இ) உற்சாகத்திற்கு　　ஈ) உற்சாகத்துடன்

5. நாம் ____________________________ வாழ உடற்பயிற்சிக்கு நேரத்தை ஒதுக்கவேண்டும்.

   அ) உடல்நலத்தின்　　ஆ) உடல்நலத்திற்கு

   இ) உடல்நலத்தை　　ஈ) உடல்நலத்தோடு

(10 புள்ளிகள்)

**(ஆ) கீழே தரப்பட்ட உதவிச் சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து பந்தியில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.**

| | | |
|---|---|---|
| அதைவிடுத்து | அதற்குள் | பார்க்காதவன் |
| முக்கியமான | நல்லதா | படிக்கிறேனே |
| சென்று | நேரத்தில்தான் | வாங்காவிட்டாலும் |
| | செல்வதன் | |

“காற்பந்துப் போட்டி தொடங்க இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறது. (1)__________________ நாம் உலக வாணிக நிலையத்தில் நடைபெறும் புத்தகக் கண்காட்சிக்கு (2)__________________ வந்து விடலாம் வா” என்றான் கபிலன். அதற்கு மாறன், “என்ன கபிலா? இந்த (3)__________________ என்னைப் புத்தகக் கண்காட்சிக்கு கூப்பிடுவதா? அதிலும் இது போன்ற கண்காட்சிகளை (4)_____________________ நான். நான்தான் பாடப் புத்தகங்களைப் (5)______________________! அது போதாதா! என்னை ஏன் அங்கு கூப்பிடுகிறாய்? இன்று (6)__________________ விளையாட்டு. அத்துடன் விளையாட்டு உடலுக்கு நன்மை தரக்கூடியது. (7)__________________ புத்தகக் கண்காட்சிக்கு என்னைக் கூப்பிடுகிறாயே! இது உனக்கே (8)__________________ தெரிகிறதா?” என்றான். புத்தகக் கண்காட்சிக்கு (9)__________________ மூலம் எத்தனையோ அரிய நூல்களைக் காணமுடியும். அந்த நூல்களை (10)________________________ அவற்றைப் பாப்பதன் மூலம் இன்னும் அதிகமாக நூல்களைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்படும் அல்லவா?” என்றான் மாறன்.

(10 புள்ளிகள்)

## (இ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

1. கருமை + கல் : ______________________
2. எட்டு + திசை : ______________________
3. பந்து + ஆட்டம் : ______________________
4. கல் + பாறை : ______________________
5. உலகம் + புகழ் : ______________________

(10 புள்ளிகள்)

## (ஈ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. வடகிழக்கு : ______________ + ______________
2. இரண்டாயிரம் : ______________ + ______________
3. செந்தமிழ் : ______________ + ______________
4. கொடியேற்றினோம்: ______________ + ______________
5. பன்னிரண்டு : ______________ + ______________

(10 புள்ளிகள்)

## (உ) பொருத்தமானவற்றைக் கோடிட்டு இணைக்கவும்.

| | |
|---|---|
| 1. திருவள்ளுவர் | தமிழ்மொழி வாழ்த்து |
| 2. ஔவையார் | இராமாயணம் |
| 3. மகாகவி பாரதியார் | திருக்குறள் |
| 4. இளங்கோ அடிகள் | ஆத்திசூடி |
| 5. கவிச்சக்கரவர்த்தி கம்பர் | சிலப்பதிகாரம் |

(10 புள்ளிகள்)

**(ஊ) கீழே தரப்பட்ட வாக்கியத்திலே கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக.**

1. மக்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத பொருள்களுள் **தலையாயது** தூய்மையான காற்றே ஆகும்.

   அ) அடிப்படையாணது ஆ) முதன்மையானது

   இ) முக்கியமானது ஈ) தேவையானது

2. உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் தங்கள் பள்ளியைத் **தூய்மையாக** வைத்திருக்கிறார்கள்.

   அ) அசுத்தமாக ஆ) சுத்தமாக

   இ) வெள்ளையாக ஈ) பளபளப்பாக

3. மாணவர்கள் ஒரு துறையில் தேர்ச்சி பெறும்போது ஆசிரியர்கள் **உவகை** அடைகின்றனர்.

   அ) வேதனை ஆ) குழப்பம்

   இ) மகிழ்ச்சி ஈ) தெளிவு

4. அந்தப் பெரியவர், தன்னிடம் உதவி நாடிவரும் அனைவருக்கும் உதவி செய்யும் **தன்மையுடையவர்**.

   அ) எண்ணமுடையவர் ஆ) பழக்கமுடையவர்

   இ) இயல்புடையவர் ஈ) மனத்தையுடையவர்

5. எல்லா மனிதர்களும் மற்றவர்களிடமிருந்து புகழ்ச்சியான வார்த்தைகளையே கேட்க **விழைகின்றனர்.**

   அ) முந்துகின்றனர் ஆ) இசைகின்றனர்

   இ) விரும்புகின்றனர் ஈ) மகிழ்கின்றனர்

(10 புள்ளிகள்)

(எ) கீழே தரப்பட்ட படத்தொடரைக் கவனமாகப் பார்த்து கருத்தை விளங்கிக் கொள்க. கதை விளங்கும்படியாக ஐந்து (5) வசனங்கள் எழுதவும்.

படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களை வசனம் எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**குறிப்பு** : மிகக் குறைந்தது **5 சொற்கள்** கொண்ட வசனமாக இருக்கவேண்டும்.

## பிராணிகளிடம் அன்பு செலுத்துவோம்



| | | |
|---|---|---|
| பறவை | சன்னல்வழி | பறக்கமுடியாமல் |
| வகுப்பறைக்குள் விழுந்தது | இறக்கையில் இரத்தக்காயம் | முதலுதவி |
| அட்டைப் பெட்டியில் | உணவும் தண்ணீரும் | நலமாகியது |
| | சுதந்திரமாகப் பறந்தது | |

1. ______________________________

______________________________

______________________________

2. ______________________________

______________________________

______________________________

3. ______________________________

______________________________

______________________________

4. ______________________________

______________________________

______________________________

5. ______________________________

______________________________

______________________________

(20 புள்ளிகள்)

**(ஏ) கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை எழுதி வசனத்தைப் பூர்த்தி செய்க.**

1. “யாமறிந்த மொழிகளிலே ______________________ போல் இனிதாவது எங்கும் காணோம்” என்றார் பாரதியார்.

2. திருக்குறள் அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பெரும் பிரிவுகளைக் கொண்டதால் ______________________ என்றும் அழைக்கப்படுகிறது.

3. முத்தமிழ் எனப்படுவது இயல் ____________________ நாடகம் ஆகும்.

4. வெளியூரில் உள்ள என் தந்தையுடன் நான் தொலைபேசியில் ______________________________.

5. மாலையில் சூரியன் மேற்கில் _________________________.

6. தமிழ்ப் பாடசாலையில் மாணவர்கள் ______________ வாழ்த்து பாடுவார்கள்.

7. சேரர், சோழர், பாண்டியர் ____________________ என்று போற்றப்பட்டார்கள்.

8. ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற ____________________’ என்பது பழமொழி.

9. இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, கைப்பு என்பன உணவின் ___________________________ எனப்படும்.

10. மலையும் மலை சார்ந்த இடமும் ______________________ எனப்படும்.

(20 புள்ளிகள்)